# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, மாணவர்கள் (உயர் கல்விக்) கடன்கள் சட்டம்

---

*[1983, திசெம்பர் மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, திசெம்பர் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை: சதம் 90* *தபாற் செலவு: சதம் 60*

**1983 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, மாண வர்கள் (உயர் கல்விக் கடன்கள் சட்டம்**

[1983 திசெம்பர் மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 26/81
1499

**உயர் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கும், 1972 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மாண வர் (உயர்கல்வி) கடன் நிதியச் சட்டத்தை நீக்குவதற்கும், அவற் றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, மாணவர்கள் (உயர்கல்விக்) கடன்கள் சட்டம் என எடுத்துக்காட் டப்படலாம். சுருக்கப்பெயர்.

## பாகம் I

### மாணவர்களுக்குக் கடன்கள் வழங்கல்

2. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பின்வரும் உயர்கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களுக்குக் கடன்கள் வழங்குதல் குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்றினது கடமையாதல் வேண்டும்:— கடன்கள் வழங்கல்.

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங் கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக் கப்பட்டனவாகக் கருதப்பட்ட எல்லாப் பல்கலைக் கழகங் களும், பல்கலைக்கழகமொன்றின் வளாகங்களும் அல் லது பல்கலைக்கழகக் கல்லூரிகளும் அத்துடன் அத்த கைய பல்கலைக்கழகத்திற்கான, வளாகத்திற்கான அல் லது பல்கலைக்கழகக் கல்லூரிக்கான ஏதேனும் அடுத்த மை நிறுவனமும் ; அத்துடன்

(ஆ) உயர்கல்வியை அளிக்கின்றதும் அரசாங்க மானியக்கொடை மூலம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பேணப்படுவதும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஏதேனும் நிறுவனம்.

(2) அமைச்சரானவர், காலத்துக்குக்காலம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளி யிடப்படும் அறிவிப்பின் மூலம் இலங்கை வங்கியை அல்லது மக் கள் வங்கியை அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக குறித்து ரைக்கப்பட்ட வங்கி ஒன்றாக இருப்பதற்குச் சம்மதிக்கின்ற வேறு ஏதேனும் வங்கியைக் குறித்துரைக்கலாம். அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட வங்கியெதுவும் இதன் பின்னர் இச்சட்டத் தில் ஒரு " குறித்துரைக்கப்பட்ட வங்கி " எனக் குறிப்பீடு செய்யப் படும்.

(3) திறைசேரிப் பிரதிச் செயலாளர், குறித்துரைக்கப்பட்ட வங்கி ஒவ்வொன்றுடனும் கலந்தாலோசித்து, அத்தகைய குறித்துரைக் கப்பட்ட வங்கிகளுள் எது, ஏதேனும் ஆண்டில் மாணவர்களுக் குக் கடன்கள் வழங்கச் சம்மதிக்குமென்பதைத் தீர்மானித்தல்

வேண்டும். அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வங்கியெதுவும், இதனகத்துப்பின்னர் " தோதான குறித்துரைக் கப்பட்ட வங்கி " எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

கடன்கள் பெறத் தகவுடையவரான மாணவர்களின் நிரலைத் தயாரித்தல்.

3. (1) பின்வருவன தொடர்பாக உயர்கல்வி நிறுவனமொன்றின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அமைச்சரானவர் எழுத்திலான பொதுப்பணிப்புக்களைக் கொடுக்கலாம் :—

(அ) எந்த நிபந்தனைகளுக்கு அமைவாக மாணவர்கள் கடன்கள் வழங்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டுமோ அந்த நிபந்தனைகள் ;

(ஆ) கடன்கள் வழங்கப்படுவதற்குத் தகவுடையவரான மாணவர்களின் பெயர்களைக் கொண்ட நிரல்களைத் தயாரிப்பதில், அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ; அத்துடன்

(இ) அமைச்சரின் அபிப்பிராயப்படி கடன்கள் வழங்குவதுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான வேறேதேனும் கருமம்,

அத்துடன் அத்தகைய எழுத்திலான பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(2) உயர்கல்வி நிறுவனமொவ்வொன்றினதும் பிரதான நிறைவேற்று அலுவலர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, இச்சட்டத்தின்கீழ் கடன்கள் பெறுவதற்குத் தகவுடையவரான மாணவர்களின் பெயர்களைக் கொண்ட நிரல்களை, அத்தகைய மாணவர் ஒவ்வொருவருக்கும் விதந்துரைக்கப்பட்ட கடன்தொகை உட்பட, காலத்துக்குக்காலம் தயாரித்தல் அல்லது தயாரிப்பித்தல் வேண்டுமென்பதுடன், அந்த உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபையிடம் அத்தகைய நிரல்களைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) உயர்கல்வி நிறுவனமொன்றின் ஆளும் அதிகாரசபை குறித்துரைக்கப்பட்ட வங்கிகளின் முகாமையாளர்களுடனான கலந்தாலோசனையுடனும் (1)ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் கொடுக்கப்பட்ட எழுத்திலான அத்தகைய பொதுப்பணிப்புகளைக் கருத்திற்கொண்டும், (2) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய நிரல்களை, அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சேர்ப்புகள், நீக்கங்கள் அல்லது திரிபுகள் என்பனவற்றுடன் அங்கீகரிக்கலாம் என்பதுடன், தோதான குறித்துரைக்கப்பட்ட வங்கியின் முகாமையாளருக்கு அத்தகைய நிரல்களை அனுப்பிவைத்தலும் வேண்டும்.

தோதான குறித்துரைக்கப்பட்ட வங்கி யாருக்குக் கடன்கள் வழங்கலாம் என்பதும் அத்தகைய கடன்களுக்கான நியதிகளும்.

4. (1) மூன்றும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட மாணவர்களின் பெயர்களைக் கொண்ட நிரல் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் தோதான குறித்துரைக்கப்பட்ட வங்கியின் முகாமையாளர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய மாணவர்களில் எவருக்கேனும் அல்லது எல்லோருக்கும் கடன்களை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எவரேனும் மாணவருக்கு வழங்கப்பட்ட கடனென்று அத்தகைய கடனைத் திருப்பிக் கொடுப்பதாக அத்தகைய மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் கொடுக்கப்படும் உத்தரவாதத்தோடு, அத்தகைய கடனைத் திருப்பிக் கொடுப்பதாக அத்தகைய மாணவரினால் கொடுக்கப்படும் எழுத்திலான பொறுப்பேற்பின் மேல் இருத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்திலான பொறுப்பேற்பு குறித்துரைக்கப்பட்ட வங்கிக்கு வழங்கப்பட்ட ஒரு வாக்குறுதிப்பத்திரமொன்றையும், செய்யப்பட்ட கடன் விண்ணப்பத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகள் தவிர்ந்த, எத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய (1) ஆம் உட்பிரிவின் கீழ் தோதான குறித்துரைக்கப்பட்ட வங்கி கடன்களை வழங்கலாமென்பது அத்தகைய வங்கியினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**5.** அமைச்சர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பாக எவரேனும் மாணவரிடமிருந்து இறுக்கப்படவேண்டிய வட்டி வீதத்தைக் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கலாம் என்பதுடன் அத்தகைய வட்டி வீதம் திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் தோதான, குறித்துரைக்கப்பட்ட வங்கிக்கும் தெரிவிக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதம், இச்சட்டத்தின் கீழ் எந்த நோக்கத்திற்காகக் கடன்கள் வழங்கப்பட்டனவோ அந்நோக்கத்தை ஒத்த நோக்கத்துக்காக வழங்கப்பட்ட கடன்களுக்காக ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வங்கியினால் அறவிடப்படும் நடப்பிலுள்ள வட்டி வீதத்திலும் குறைவானதாக இருக்குமிடத்து, இருவட்டி வீதங்களுக்குமிடையேயுள்ள வேறுபாடு, நிதியத்திலிருந்து திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட வங்கிக்கு ஆண்டுதோறும் செலுத்தப்படுதல்வேண்டும்.

மாணவர்களிடமிருந்து இறுக்கப்படற்பாலதான வட்டி.

**6.** ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் ஆளும் அதிகாரசபை —

(அ) எவரேனும் மாணவர் அவரது பரீட்சையில் திருப்தியற்ற வகையில் பெறுபேறுகளைப் பெற்றுள்ளாராயின் ; அல்லது

(ஆ) அத்தகைய மாணவர் முறைமையீனமாக நடந்து கொண்டுள்ளாராயின் ; அல்லது

(இ) அத்தகைய மாணவரின் நிதி நிலைமையானது, விடயத்துக்கேற்றவாறு, 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எந்தத் தேதியன்று அத்தகைய குறித்துரைக்கப்பட்ட வங்கிக்கு அத்தகைய மாணவரின் பெயர் கொடுத்துதவப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து அல்லது கடன் வழங்கிய தேதியிலிருந்து மேம்பாடு அடைந்திருந்தால்,

கடனொன்றை மறுத்தல் அல்லது இடைநிறுத்தல்.

அத்தகைய மாணவருக்கு கடன் ஒன்றை வழங்குவதை மறுக்கும்படி அல்லது அத்தகைய வங்கி தவணைப் பணங்களில் கடனின் வழங்கலைத் தொடங்கியிருப்பின் கடனின் மேலும் எவையேனும் தவணைப்பணங்களை வழங்குவதை நிறுத்தும்படி குறித்துரைக்கப் பட்ட வங்கியைத் தேவைப்படுத்துதல் வேண்டும். அத்துடன் அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட வங்கியின் கடமையாதல் வேண்டும்.

தோதான குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்றினால் கடன்களும் வட்டியும் அறவிடப்படுதல்.

7. (1) நாலாம் பிரிவின் கீழ் ஒரு மாணவருக்குக் கடனொன்று வழங்கப்பட்டிருக்குமிடத்து, கடன் தொகையும் அதன் மீது போகுமதியான வட்டியும் அத்தகைய கடன், எந்த நியதி நிபந்தனைகளுக்கிணங்க வழங்கப்பட்டதோ அந்த நியதி நிபந்தனைகளுக் கிணங்கத் தோதான குறித்துரைக்கப்பட்ட வங்கியினால் அறவிடப் படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், கடன் வழங்கப்பட்ட தேதிக்கும் அத்தகைய கடனைத் திருப்பிக்கொடுக்கத் தொடங்கிய தேதிக்கு மிடையில் அத்தகைய கடன் மீது வருமதியாகவுள்ள வட்டி, அத்தகைய வங்கியினால் அத்தகைய வட்டியாக வருமதியாகவுள்ள தொகை பற்றி அறிவிக்கப்பட்டதன் மேல், ஆண்டுதோறும் திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் நிதியத்திலிருந்து அத்தகைய வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்காக, " திருப்பிக்கொடுக்கத் தொடங்கிய தேதி" என்பது ஊழியத்தைப் பெற்றுக்கொண்ட அல்லது அவரின் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யாது உயர்கல்வி நிறுவனத்தை விட்டு அவர் விலகிய நாலு மாதங் களுள் வரும் ஒரு தேதியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் கீழ் ஏதேனும் வட்டியை தோதான குறித்துரைக்கப்பட்ட வங்கி பெற்றுக்கொள்ளு தல், விடயத்திற்கேற்றுறபோல கடனைப் பெற்றவரிடமிருந்து அல்லது கடனுக்கு உத்தரவாதமளித்தவரிடமிருந்து அத்தகைய வட்டியை அறவிடுவதிலிருந்து அத்தகைய வங்கியை விலக்கு வதாகக் கருதப்படுதலாகாது.

(3) அத்தகைய வட்டி அல்லது அதன் பாகம் விடயத்திற் கேற்றுறபோல கடனைப் பெற்றவரிடமிருந்து அல்லது கடனுக்கு உத்தரவாதமளித்தவரிடமிருந்து (2) ஆம் உட்பிரிவின் கீழ் அற விடப்பட்டிருக்கும் இடத்து, அத்தகைய வங்கியின் முகாமையாளர் அவ்விதம் அறவிடப்பட்ட அறவீட்டுக்குச் சமமான தொகை யொன்றை திறைசேரிப் பிரதிச் செயலாளருக்குச் செலுத்த வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனொன்று தொடர்பில் ஏதேனும் பணத்தொகையை தோதான குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்று அறவிட்டிருக்குமிடத்து, அத்தகைய தொகை (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் கீழ் வங்கியினால் பெறப் பட்ட வட்டியினைத் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு மீளக் கொடுப்பனவு செய்வதற்குள்ள பொறுப்பின் ஒழிவுக்கு

முதலில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க அத்தகைய வங்கியின் முகாமையாளர் அத்தகைய பணத் தொகையை திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

கடன்களைப் பெற்றுக்கொண்டவர் களின் கடமைகள்.

8. இச்சட்டத்தின் கீழ் ஒரு தோதான குறித்துரைக்கப்பட்ட வங்கியிடமிருந்து ஏதேனும் கடனைப் பெற்றுக்கொண்ட ஒருவர், அத்தகைய கடன் தொடர்பில் ஏதேனும் பணத்தொகை அவரிடமிருந்து சொல்லப்பட்ட வங்கிக்குப் போகுமதியாயிருக்கும் வரை விதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பின்வரும் தகவல்களை பதிவஞ்சலில் அனுப்பப்படும் கடிதம் மூலம் அவ்வங்கியின் முகாமையாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் :—

(அ) அவரது வதிவிட முகவரியும், அத்துடன் காலத்துக்குக் காலம் அத்தகைய முகவரியில் ஏற்படக்கூடிய ஏதேனும் மாற்றமும் அத்தகைய மாற்றத் தேதியிலிருந்து ஒரு மாதத்தைக் கொண்ட காலப்பகுதியினுள் ;

(ஆ) அவரின் பெயரை அவர் மாற்றுகின்றவிடத்து, அத்தகைய மாற்றத்தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் அவரின் புதிய பெயரும், அத்தகைய மாற்றம் செய்யப்பட்ட தேதியும் அத்தகைய மாற்றம் செய்யப்பட்ட முறையும் ;

(இ) ஏதேனும் ஊழியத்தில் அவர் ஈடுபட்டிருக்குமிடத்து, அத்தகைய ஊழியத்தின் தொடக்கத்தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள்ளாக, ஊழியத்தின் தன்மை, தொழில் தருநரின் பெயரும் முகவரியும், அத்தகைய ஊழியத்தைத் தொடங்கிய தேதி, அதற்காகக் கொடுபடற்பாலதான ஊதியம் என்பவையும் அதுபோன்று காலத்திற்குக் காலம் நடைபெறக்கூடிய ஊழிய மாற்றங்கள் தொடர்பானவையும் ;

(ஈ) கடன் அறவிடும் நோக்கத்திற்கு அவசியமானதென அத்தகைய முகாமையாளர் கருதக்கூடியவாறுள வேறு ஏதேனும் தகவல் அத்தகைய கடனைப் பெற்றவரிடமிருந்து அத்தகைய தகவலைக்கோரும் அறிவித்தலொன்றில் முகாமையாளர் குறித்துரைக்கக்கூடியவாறுள அத்தகைய காலத்தினுள்.

இச்சட்டத்தின் கீழ் கடன் ஒன்றைப் பெற்றுக்கொண்ட எவரினதும் தொழில் தருநரொருவருக்குள்ள கடமைகள்.

9. (1) ஒவ்வொரு தொழில்தருநரும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக, 1969 ஒக்டோபர் முதலாம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஊழியத்தைப் பெற்றிருக்கும் அவரது ஊழியர்கள் ஒவ்வொருவரையும் உயர்கல்வி நோக்கத்திற்காக ஏதேனும் வங்கிக் கடனை அவர் பெற்றிருந்தாரா அல்லது பெற்றிருக்கவில்லையாவென விசாரித்து அவ்வாறு பெற்றிருந்தால், அத்தகைய கடன் விபரங்களை தொழில் தருநருக்கும் அத்தகைய கடன் எந்த வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதோ அந்த வங்கியின் பொது முகாமையாளருக்கும் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தி அவருக்கு அறிவித்தலொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன்,

அத்தகைய அறிவித்தல் அவருக்குக் கிடைக்கப்பெற்ற பின்னர் பதினான்கு நாட்களுக்குள்ளாக சொல்லப்பட்ட விபரங்களைக் கொடுத்துதவுதல் அத்தகைய ஒவ்வோர் ஊழியரினதும் கடமை யாதலும் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர், ஒவ்வொரு தொழில்தருநரும், அத்தகைய தொழில்தருநரின் கீழ் ஊழியத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு நியமனக் கடிதமொன்றை வழங்குவதன் முன்னர், பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல் மூலம், உயர்கல்வி நோக்கத்திற்கென ஏதேனும் வங்கிக்கடனை அவர் பெற்றிருந்தாரா இல்லையாவென வெளிப்படுத்துமாறு அவரைத் தேவைப்படுத்த வேண்டும் என்பதுடன், அவ்வாறு பெற்றிருந்தால், அத்தகைய கடன் விபரங்களைத் தொழில்தருநருக்கும், அத்தகைய கடன் எந்த வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த வங்கியின் பொது முகாமையாளருக்கும் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தவும் வேண்டும். அத்தகைய அறிவித்தல் அவரினால் பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களினுள்ளாக அத்தகைய விபரங்களைக் கொடுத்துதவுதல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும். அத்தகைய ஆள், அத்தகைய விபரங்களை சொல்லப்பட்ட முப்பது நாட்களினுள் கொடுத்துதவத் தவறுமிடத்து, தொழில்தருநர் அத்தகைய ஆளுக்கு நியமனக் கடிதமொன்றை வழங்குதலாகாது.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் எவரேனும் ஊழியரிடமிருந்து அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஊழியத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் ஆளிடமிருந்து, எவையேனும் விபரங்கள் கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களினுள்ளாக, தொழில்தருநர் அத்தகைய விபரங்களைச் சம்பந்தப்பட்ட வங்கியின் பொது முகாமையாளருக்கு அறிவிக்கவேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின் கீழ் தகவல் தொடர்ப்பு ஒன்றைப் பெற்றதன் மேல் அல்லது இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வங்கியிடமிருந்து ஓர் ஊழியர் கடனொன்றைப் பெற்றுள்ளார் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் குறித்துரைக்கப்பட்ட வங்கிக்கு இருக்குமிடத்து, குறித்துரைக்கப்பட்ட வங்கி குறிப்பிட்ட பணத்தொகையொன்றை முழுத் தொகையாக அல்லது தவணைக் கட்டணமாக அத்தகைய ஊழியரின் சம்பளத்திலிருந்து கழிக்கவேண்டுமென அத்தகைய தொழில்தருநருக்கு பதிவஞ்சல் மூலம் அறிவித்தலைச் சேர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் எழுத்திலான வேறு சட்டத்தில் அல்லது அவருக்கும் ஊழியருக்குமிடையிலான ஏதேனும் ஒப்பந்தத்தில் முரணாக உள்ளது எதுவும் எப்படியிருப்பினும், அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கிணங்க அத்தகைய பணத் தொகையை அல்லது தொகைகளைக் கழித்து அத்தகைய பணத் தொகையை அல்லது பணத்தொகைகளை அத்தகைய வங்கியின் முகாமையாளருக்கு அனுப்புதல் தொழில் தருநரின் கடமையாதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் அல்லது (2) ஆம் உட்பிரிவின் தேவைப் பாடுகளுக்கு இணங்கி ஒழுகத் தவறும் அல்லது பொய்யான அல்லது செம்மையற்ற விபரங்களைக் கொடுத்துதவும் எவரேனும் தொழில்தருநர், எவரேனும் ஊழியர் அல்லது ஊழியத்திற்காக தெரிவு செய்யப்பட்ட எவரேனும் ஆள் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவரினால் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மீது ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறுமாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான மறியல் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(6) எட்டாம் பிரிவினது அல்லது இப்பிரிவின் (2) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகளின் கீழ் பதிவு அஞ்சல் மூலம் ஏதேனும் கடிதம் அல்லது அறிவித்தல் அனுப்பப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய கடிதம் அல்லது அறிவித்தல் அஞ்சலிலிடப்பட்ட தேதியிலிருந்து எழு நாட்களினுள்ளாக அத்தகைய கடிதம் அல்லது அறிவித்தல் முகவரியிடப்பட்டவர்களினால் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

10. இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து கடனொன்றைப் பெற்றவரும், அத்தகைய கடன் தொடர்பாக ஏதேனும் பணத்தொகை தொடர்பில் அத்தகைய வங்கிக்குக் கடனாளியாகவுள்ளவரும் அல்லது பொறுப்பாகவுள்ளவரும் அத்துடன் ஏதேனும் ஊழியத்தில் ஈடுபட்டுள்ளவருமான எவரேனும் ஆள், அவருக்கும் அவரது தொழில் தருநருக்கும் இடையேயான ஏதேனும் ஒப்பந்தம் எதுவேனுமிருப்பின் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் இதற்கு முரணானது எது எப்படியிருப்பினும், 9 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் காட்டப்பட்டவாறாக, அத்தகைய ஊழியத்தின் மூலம் அவர் பெறும் ஊதியத்திலிருந்து அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்குச் சம்மதம் கொடுத்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும். நிலுவையாகவுள்ள கடன்களை அறவிடுவதற்கு உட்கிடையான சம்மதம்.

11. வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் இதற்கு முரணானது எது எவ்விதமிருப்பினும், இச்சட்டத்தின் கீழ்க் குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்றிடமிருந்து அவரால் பெறப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட ஏதேனும் கடன் தொடர்பில் இருபத்தொரு வயதிற்குக் குறைந்த எவரேனும் ஆளினால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் செல்லுபடியானதாகச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க அத்தகைய உடன்படிக்கை செய்யப்பட்ட நேரத்தில் அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் இருபத்தொரு வயதிற்கு மேற்பட்டவராக இருந்தார் என்றுற்போன்று அவருக்கெதிராக வலிமையுடையதாக நிலைநாட்டப்படுதலும் வேண்டும். பராயமடையாதோரிடமிருந்து பணத்தை அறவிடுதல்.

*உத்தரவாதம் அளித்தவரிடமிருந்து கடன்களை அறவிடுதல்.*

**12.** கடன் ஒன்றைப் பெற்ற ஒருவர், 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய கடனை மீளச் செலுத்துவதற்குத் தவறுமிடத்து, குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்று இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் இதற்கு முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும், அத்தகைய கடனை அத்தகைய கடனிற்கு உத்தரவாதமளித்தவரிடமிருந்து அறவிடுவதற்கு அவசியமானவையான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

*குறித்துரைக்கப்பட்ட வங்கி பிரதான கடன் கொடுத்தவராகக் கருதப்படுதல்.*

**13.** இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் இதற்கு முரணானது எது எவ்விதமிருப்பினும், கடனொன்றை வழங்கும் குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்று, அத்தகைய கடன் தொடர்பில் பிரதான கடன் கொடுத்தவராகக் கருதப்படுதல்வேண்டும்.

*கடன் பெற்றவர் இலங்கையை விட்டுச் செல்லுதல் மீதான மட்டுப்பாடு.*

**14.** (1) இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து கடன் பெற்ற ஆளெவரும், அக்கடன் தொடர்பாக ஏதேனும் பணத்தொகை அவரிடமிருந்து சொல்லப்பட்ட வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியதாயிருக்கும் வரை இலங்கையை விட்டுச் செல்லுதல் ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும், சொல்லப்பட்ட கடன்பெற்றவர், வங்கியின் திருப்திக்கு நல்லதும் போதியதுமான பிணைப்பொறுப்பை வழங்கியுள்ளாரென அத்தகைய குறித்துரைக்கப்பட்ட வங்கியின் முகாமையாளர் திருப்தியடைந்தால், அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அத்தகைய ஆளை அத்தகைய மட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆள் எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் இலங்கையை விட்டுச் செல்லும் ஆட்கள் தொடர்பான ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அவற்றை மதிப்புக்குறைப்பனவாக இருத்தலாகாது.

*கடன்பெற்றவர் அல்லது கடனிற்கு உத்தரவாதமளித்தவர் குறித்த சில சட்டவாக்கங்களின் நன்மைகளைக் கோராமை.*

**15.** (1) இச்சட்டத்தின் கீழ் கடனொன்றைப் பெற்ற ஒருவர் அல்லது அத்தகைய கடனொன்றிற்கு உத்தரவாதமளித்தவர், அத்தகைய கடனை அல்லது அதன் பாகத்தை அல்லது அதன் மீது வருமதியான ஏதேனும் வட்டியை அறவிடுவதற்காக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் ஏற்படும் ஏதேனும் வழக்கு, கருமம் அல்லது எவையேனும் வழக்கு நடவடிக்கையில் பின்வரும் சட்டவாக்கங்களின் எவையேனும் ஏற்பாடுகளின் நன்மைகளைக் கோருதல் அவருக்கு இயலாததொன்றாதல் வேண்டும் :—

(அ) காலவரையறைக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 68) ;

(ஆ) கடன் இணக்கக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 81) ;

(இ) கடனிறுக்க வகையின்மைக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 97) ;

(ஈ) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (அத்தியாயம் 101) ;

(உ) பகிரங்க சேவையாளர் (பொறுப்புகள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 103).

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் கடனை வழங்குவதற்கான நிபந்தனையாகக் கருதப்பட வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் கடனுக்கு உத்தரவாத மளிப்பவர் இலங்கைச் சட்டங்களின் கீழ் ஒரு பிணைகாரருக்கு வழங்கப்பட்ட நன்மைகளை அல்லது சிறப்புரிமைகளைக் கோர உரித்துடையவராகார் என்பதுடன், கடன்களை மீளக் கொடுப்பதற்கு அதைப் பெற்றுக்கொண்டவருடன் கூட்டாகவும் தனித்தும் பொறுப்புடையவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

## பாகம் II

## நிதியத்தின் தொழிற்பாடு

மாணவர்கள் (உயர்கல்வி) கடன் நிதியத்தைத் தாபித்தல்.

**16.** (1) மாணவர்கள் (உயர்கல்வி) கடன் நிதியம் என அழைக்கப்படவேண்டிய ஒரு நிதியம், திறைசேரியில் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) திறைசேரிப் பிரதிச் செயலாளர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் நிதியத்துக்கான ஒரு பொதுக் கணக்குத் திறைசேரியில் திறந்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

அறவிடப்பட முடியாத கடன்கள்.

**17.** (1) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் கடன் தொடர்பாக ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வங்கிக்கு வருமதியான ஏதேனும் பணத்தொகை அத்தகைய வங்கிப் பணிப்பாளர் சபையின் அபிப்பிராயப்படி அறவிடமுடியாததெனவிருக்குமிடத்து, அத்தகைய சபை, அதில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகை அறவிடமுடியாததென எழுத்துமூலம் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் மேல் திறைசேரிப் பிரதிச் செயலாளர் நிதியத்திலிருந்து அல்லது அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு மூலத்திலிருந்து அத்தகைய பணத்தொகையை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட வங்கியின் பொது முகாமையாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

(2) திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் செய்யப்படும் ஏதேனும் அத்தகைய கொடுப்பனவு சட்டத்தின் முறையான செயற்பாட்டின்படி அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்கு அத்தகைய வங்கிக்குள்ள உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்காததாக இருத்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறுயினும், அத்தகைய பணத் தொகை அல்லது அதன் பாகம் அத்தகைய வங்கியினுல் அவ்வாறு அறவிடப்படுமிடத்து, அத்தகைய வங்கியின் முகாமையாளர், அத்தகைய அறவீட்டிற்குச் சமமான ஒரு தொகையை திறைசேரிப் பிரதிச் செயலாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

*நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பணத் தொகைகள்.*

**18.** எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் மூலம் கிடைக்கப் பெறக்கூடியவாறுன அத்தகைய பணத்தொகைகள் யாவும் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள்.*

**19.** நிதியத்தின் வரவிலிருக்கும் பணங்கள் திறைசேரிப் பிரதிச் செயலாளரினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய முறையில் செலவழிக்கப்படலாம்.

## பாகம் III

## பொது

*அலுவலர்கள் ஊழியர்கள் முதலியோர் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.*

**20.** கடனென்றைப் பெற்றுக் கொண்டவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி ஏதேனும் கடமை பொறுப்பிக்கப்பட்டிருக்கும் ஓர் ஊழியராகவிருக்கும் ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வங்கியின் அல்லது ஏதேனும் நிறுவனத்தின் ஒவ்வோர் அலுவலரும், அல்லது வேறு ஊழியரும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்திற்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் ஒரு பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

*தவறுகளும் தண்டங்களும்.*

**21.** (அ) ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் மாணவர் எவரேனும் அல்லது அவரின் பெற்றேர் அல்லது பாதுகாவலர் அந்நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் மாணவர்களின் பெயர்களைக் கொண்ட நிரலைத் தயாரித்தல் தொடர்பாக ஏதேனும் பொய்யான தகவல் கொடுத்திருக்குமிடத்து ;

(ஆ) கடனென்றைப் பெற்ற எவரேனும் ஆள் அல்லது அவரின் பெற்றேர் அல்லது அவரின் பாதுகாவலர் அல்லது அவருக்கு உத்தரவாதமளித்தவர் அல்லது எவரேனும் வேறு ஆள், இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அல்லது இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய கடனென்று தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட வங்கியின் முகாமையாளருக்கு ஏதேனும் பொய்யான தகவல் கொடுத்திருக்குமிடத்து ;

(இ) கடனென்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் ஆள் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு வேண்டுமென்று இணங்கியொழுகத்தவறுமிடத்து அல்லது அவ்வாறு இணங்கியொழுகும்போது சம்பந்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வங்கியின் முகாமையாளருக்கு பொய்யான தகவலைக்கொடுக்குமிடத்து ;

அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்தவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறுமாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

நீக்கமும் பேணல்களும்.

**22.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மாணவர்கள் (உயர்கல்வி) கடன் நிதியச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) மேற்கூறப்பட்ட சட்டம் நீக்கஞ்செய்யப்பட்டமை எப்படியிருப்பினும் —

(அ) அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட மாணவர்கள் (உயர்கல்வி) கடன் நிதியத்தின் வரவிலிருக்கும் பணங்கள் யாவும், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மாணவர்கள் (உயர்கல்வி) கடன் நிதியத்திற்கு கைமாற்றப்படுதல்வேண்டும் ;

(ஆ) அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட மாணவர்கள் (உயர்கல்வி) கடன் நிதியத்தின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும், இச்சட்டத்தித்தின்கீழ் தாபிக்கப்பட்ட மாணவர்கள் (உயர் கல்வி) கடன் நிதியத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களுமாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) அச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுவதற்காக முடிவுறுதிருக்கும் எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் இச் சட்டத்தின் கீழான வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளுமெனக் கருதப்பட வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து நடாத்தப்பட்டு முடிவு செய்யப்படுதலும் வேண்டும்.

1972 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல்.

**23.** இச் சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் தேதிக்குப் பின்னரும் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வங்கியினால் 1972 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட மாணவர்கள் (உயர்கல்வி) கடன் நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ஏதேனும் கடன் மீது ஏதேனும் பணத்தொகை அறவிடப்படும் போது, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட வங்கியினால் அத்தகைய பணத் தொகை இச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

பொருள்கோடல்.

**24.** இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"தொழில்தருநர்" என்பது, பகிரங்க சேவையில், உள்ளூர் ஆட்சிச் சேவையில், பகிரங்கக்கூட்டுத்தாபனத்தில் அல்லது ஒரு நியதிச்சட்டக்குழுவில் உள்ள ஓர் ஊழியர் தொடர்பாக, விடயத்திற்கேற்ப சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவர் அல்லது உள்ளூராட்சிச் சேவைப் பணிப்பாளர் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்டக் குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலர் எனப்

பொருளாகும் என்பதுடன் எவரேனும் வேறு ஊழியர் தொடர்பாக அத்தகைய வேறு ஊழியர் தொழிலுக்க மர்த்தப்பட்டுள்ள கடையின், அலுவலகத்தின், தாபனத்தின் அல்லது நிறுவனத்தின் சொந்தக்காரர், முகாமையாளர், அல்லது நிருவாகி எனப் பொருளாகும் ;

"ஊழியம்" என்பது ஏதேனும் சம்பளம், படி, ஊதியம் அல்லது வேறு வருமானம் கிடைக்கப்பெறும் ஏதேனும் ஊழியம் எனப் பொருளாகும் என்பதுடன், சுய தொழிலை உள்ளடக்குதலும் வேண்டும்;

"நிதியம்" என்பது இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவினால் தாபிக்கப்படும் மாணவர்கள் (உயர்கல்வி) கடன் நிதியம் என்று பொருளாகும்.

"ஆளும் அதிகாரசபை" என்பது—

(அ) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பாக, அப் பல்கலைக் கழகத்தின் பேரவையெனப் பொருளாகும் ;

(ஆ) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பாக, பல்கலைக் கழகக் கல்லூரியின் முகாமைச் சபையெனப் பொருளாகும் ; அத்துடன்

(இ) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வேறு நிறுவனம் தொடர்பாக, உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் எனப் பொருளாகும் ;

"உயர்கல்வி நிறுவனம் " என்பது —

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒரு பல்கலைக் கழகம், பல்கலைக்கழக வளாகம் அல்லது பல்கலைக் கழகக் கல்லூரி எனப் பொருளாகும் என்பதுடன், அத்தகைய பல்கலைக்கழகத்துக்கான, வளாகத்துக்கான அல்லது பல்கலைக்கழகக் கல்லூரிக்கான ஏதேனும் அடுத்தமைநிறுவனம் எனவும் பொருளாகும் ; அத்துடன்

(ஆ) உயர்கல்வியை அளிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டதும் அரசாங்க மானியக் கொடை மூலம் முற்றாக அல்லது பகுதியளவில் பேணப்படுவதும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஏதேனும் நிறுவனம் எனப் பொருளாகும் :

"முகாமையாளர்" என்பது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வங்கி தொடர்பாக, அத்தகைய வங்கியின் ஏதேனும் கிளையின் முகாமையாளரையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"பிரதான நிறைவேற்று அலுவலர் " என்பது—

(அ) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பாக, அப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் எனப் பொருளாகும் ;

(ஆ) பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பாக, அப்பல்கலைக் கழகக் கல்லூரியின் பணிப்பாளர் எனப் பொருளாகும் ; அத்துடன்

(இ) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வேறு நிறுவனம் தொடர்பாக, அந்நிறுவனத்தின் தலைவர் எனப் பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.